## 2024 நாடாளுமன்றத் தேர்தலில் சேலத்தில் ஓட்டை விழுந்ததை மறந்து விட்டாரா?

## மடிக்கணினிகளை மாணவர்களுக்கு வழங்காமல் வீணடித்த

# பழனிசாமிக்கு மடிக்கணினிகள் பற்றி பேச அருகதை கிடையாது!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் காட்டமான பதில்!

சென்னை, ஜன.6-

**“மடிக்கணினிகளை மாணவர்களுக்கு வழங்காமல் வீணடித்த பழனிசாமிக்கு மடிக்கணினிகள் பற்றி பேச அருகதை கிடையாது” என்று அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் எடப்பாடி பழனிசாமிக்கு காட்டமான பதிலடி கொடுத்துள்ளார்.**

இதுகுறித்து போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

‘நாளொரு மேடை பொழுதொரு நடிப்பு அவன் பேர் மனிதனல்ல. நாவில் ஒன்று நினைவில் ஒன்று அதன் பேர் உள்ளமல்ல’ என எம்.ஜி.ஆர் பாடிய பாடல் அப்படியே எடப்பாடி பழனிசாமிக்குப் பொருந்தும்! சேலத்து மேடையில் அரசியல் நடிப்பை அரங்கேற்றியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

“தி.மு.க. ஒரு கார்ப்பரேட் கம்பெனி” எனச் சொல்லும் பழனிசாமியின் அதிமுக, அடிமை கம்பெனியாக மாறி பல வருடங்கள் ஆகிவிட்டது.

2016ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் வரை தொடர்ந்து 10 தேர்தல்களில் தோற்ற பழனிசாமி ‘வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சி அமைப்பதை எந்தக் கொம்பனாலும் தடுக்க முடியாது’ என்று சொல்வதைக் கேட்டு சின்னக் குழந்தையும் கெக்க பெக்க என சிரிக்கும்.

### சேலத்தில் ஓட்டை விழுந்ததை மறந்துவிட்டாரா?

“2021ல் சேலம் மாவட்டத்தில் உள்ள 11 இடங்களில் 10 இடங்களில் அதிமுக வெற்றி பெற்றது. இது அ.தி.மு.க.வின் கோட்டை” என்று எடப்பாடி பழனிசாமி பேசியிருக்கிறார். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 39 தொகுதிகளை தி.மு.க. கூட்டணி கைப்பற்றியது. அந்த 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் அடங்கியிருக்கும் 234 சட்டமன்றத் தொகுதிகளில் 221 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி முதலிடம் பெற்றது பழனிசாமிக்குத் தெரியாதா? அ.தி.மு.க.வின் கோட்டையான சேலத்திலேயே 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஓட்டை விழுந்ததை எல்லாம் மறந்து விட்டாரா?

எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் 2019ஆம் ஆண்டிலேயே லேப்டாப் வழங்கும் திட்டத்தை நிறுத்திவிட்டு ‘கல்விக்கான ஆயுதமாக மடிக்கணினியை, தொடர்ந்து வழங்கி வந்தது எனது அரசு’ எனப் பச்சைப் பொய் சொல்கிறார் பழனிசாமி.

### எடப்பாடி ஆட்சியில் லேப்டாப் முறைகேடு சம்பவம்!

அ.தி.மு.க. ஆட்சியில் 68 கோடி ரூபாயில் வாங்கிய 55 ஆயிரம் லேப்டாப்கள் வீணடிக்கப்பட்டதை CAG என்ற இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கை அறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டியது. எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நடந்த லேப்டாப் முறைகேட்டை அம்பலப்படுத்திய CAG அறிக்கை 2023 ஏப்ரலில் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

2017-2018ஆம் ஆண்டு போட்டித் தேர்வுக்குத் தயாரான 12ஆம் மாணவர்களுக்கு லேப்டாப்புகள் வழங்க எல்காட் நிறுவனம் மூலம்



60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட லேப்டாப்புகள் கொள்முதல் செய்யப்பட்டன. அதில், 8 ஆயிரத்து 79 லேப்டாப்புகள் மட்டுமே மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. 55 ஆயிரம் லேப்டாப்புகளை தேவைப்படும் மாணவர்களுக்கு வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்காததால், அந்த லேப்டாப்புகளின் பேட்டரிகள் வாரண்டி காலாவதி ஆகிவிட்டது. இதனால், 68 கோடியே 71 லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டது என CAG அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

‘அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட லேப்டாப் திட்டம் மாணவர்களுக்கு அறிவுப்பூர்வமான கல்வி கிடைப்பதை உறுதி செய்த திட்டம்’ எனச் சொல்கிறார் பழனிசாமி. வாங்கிய லேப்டாப்புகளையே விநியோகம் செய்யாமல் வீணடித்த பழனிசாமி அறிவுடன்தான் பேசுகிறாரா?

CAG அறிக்கையில் 53ஆம் பக்கத்தில் மடிக்கணினிகளின் தேவை, கொள்முதல் மற்றும் விநியோகம் தொடர்பாக அட்டவணை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அதில், எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் 2017 2018 முதல் 2020 - 2021 வரை 11 மற்றும் 12ம் வகுப்பில் 18.60 லட்சம் தகுதியான மாணவர்கள் இருந்தார்கள். ஆனால், 20 சதவிகித மாணவர்களுக்கு வழங்காமல் புறக்கணித்தார்கள். 2017-2018 ஆம் ஆண்டில் 12 ஆம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 2.32 லட்சம் மாணவர்கள், பள்ளிப் படிப்பை முடிக்கும் வரை லேப்டாப்புகளை பெறவில்லை.

55 ஆயிரம் மடிக்கணினிகளை மாணவர்களுக்கு வழங்காமல் வீணடித்த எடப்பாடி பழனிசாமி, லேப்டாப் பற்றி எல்லாம் பேசுவதற்கு அருகதை இருக்கிறதா?

### கழக ஆட்சியில் உலகத் தரமான மடிக்கணினிகள்!

20 லட்சம் கல்லூரி மாணாக்கருக்கு லேப்டாப் வழங்கும் “உலகம் உங்கள் கையில்” திட்டத்தை முதலமைச்சர் இன்று தொடங்கி வைக்கிறார். தொழில்நுட்ப அறிவியலை வலுப்படுத்த Dell, Acer, HP போன்ற உலகத் தரமான நிறுவனங்களின் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு வழங்கப்படும். இந்த மடிக்கணினிகளில் Intel i3 / AMD Ryzen 3 Processor, 8 GB RAM, 256 GB SSD, Windows 11 Home Strategic மற்றும் BOSS Linux OS ஆகிய மென்பொருள்கள் முன்னதாக நிறுவப்பட்டுள்ள நிலையில், நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் திட்டப் பணிகளுக்காக MS Office 365, மேலும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளான Perplexity Proவின் ஆறு மாத சந்தாவும் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டு மாணவர்கள் உலகத்தோடு போட்டியிடும் வகையில் ஒவ்வொரு திட்டமாக வகுத்து வருகிறது தி.மு.க. அரசு.

### பொறுத்துக் கொள்ள முடியாமல் குமைகிறார் பழனிசாமி!

மகளிர், அரசு ஊழியர், மாணாக்கர் என ஒவ்வொரு பிரிவினரும் முதலமைச்சரின் திட்டங்களால் பயன்பெறுவதைப் பார்த்து பொறுத்துக் கொள்ள முடியாமல் குமைகிறார் பழனிசாமி.

டீ கடையில் காசு இல்லாமல், “டேய் ஒரு டீ குடிக்க எவ்ளோ நடிக்க வேண்டியது இருக்கு உங்க முன்னாடி” என வடிவேலு பேசும் காமெடி தான் பழனிசாமி பேசுவதைக் கேட்கும் போது நினைவுக்கு வருகிறது. டீ கடையில் இரண்டு பேப்பர் படிக்கும் போது அதில் உள்ள செய்திகளில் தனக்கு எல்லாம் தெரிந்தவர் போல வடிவேலு தலையிட்டு உதார் விடுவார். அப்படிதான் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் எல்லாம் தன்னால்தான் வந்தது என பழனிசாமி நடிக்க வேண்டியிருக்கிறது. மகளிர் உரிமைத்தொகை, லேப்டாப், போன்றவற்றை அ.தி.மு.க. குரல் கொடுத்ததால்தான் தி.மு.க. அரசு கொண்டு வந்தது என பழனிசாமி சொல்லிக் கொள்ளும் வரிசையில் இப்போது பொங்கல் பரிசுத் தொகுப்பிலும் பழனிசாமி தலையை நுழைத்திருக்கிறார். அடுத்து நாம் ஓர் திட்டம் கொண்டு வர முடிவு செய்தாலே, உடனே முந்திக் கொண்டு அதற்கு ஒரு கருத்தைச் சொல்லி, அது தன்னால்தான் வந்தது எனப் பெருமைப்பட்டு அரசியல் செய்வது எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் செய்யும் செயலா?

### கடவுள் மனப்பான்மையில் பழனிசாமி வாழ்ந்து கொண்டிருக்கிறார்!

“எல்லாமே என்னால்தான் நடந்தது” என்று ஒரு Mindsetஃபோபியா சிலருக்கு உண்டு. அதில், பழனிசாமியும் சேர்ந்து கொண்டார். “நான்தான் எல்லாம் செய்பவன்” என்ற “God Complex” அதாவது கடவுள் மனப்பான்மையில் பழனிசாமி வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

நம்முடைய திட்டங்கள் மக்களிடம் ஏற்பட்டிருக்கும் ஆதரவை எதிர்க் கட்சித் தலைவரே உணர்ந்ததால்தான் இப்படியெல்லாம் பேசி வருகிறார். பழனிசாமி அரசியல் செய்வதற்கும் நம்முடைய சாதனை திட்டங்கள் காரணமாக அமைந்திருக்கிறது. Election Eyewashக்காக லேப்டாப் கொடுக்கிறார் என சொல்கிறார் பழனிசாமி. அவருடைய God Complexஐ என்ன சொல்ல?

### பழனிசாமி பெயரைக்கூட சொல்ல மறுக்கும் அமித்ஷா!

சேலத்தில் எடப்பாடி பழனிசாமி பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில்தான் புதுக்கோட்டையில் உரையாற்றிக் கொண்டிருந்த ஒன்றிய அமைச்சர் அமித்ஷா, “ஏப்ரலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி மலரும். பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் வளர்ச்சி பாதையில் பங்கேற்போம்” என்றார். ‘கூட்டணி ஆட்சி’ என ஆட்சியில் பங்கு என்றதோடு பழனிசாமியின் பெயரைக் கூட அமித்ஷா உச்சரிக்கவில்லை. “கூட்டணிக்கு தலைமை எடப்பாடி பழனிசாமிதான்” என அடிமைகள் வீராவேசம் காட்டினாலும் எஜமானர் அமித்ஷா, பழனிசாமி பெயரைக்கூட சொல்ல மறுக்கிறார். . ‘கூட்டணிக்கு தலைமை’ என்ற பதவியிலேயே தடுமாறிக் கொண்டிருக்கும் பழனிசாமிதான் ‘முதல்வர் பதவி’க்கு வரப் போகிறாரா? ”இந்த அவமானம் உனக்கு தேவையா?” என்ற நடிகர் வடிவேலுவின் காமெடிக்குப் பொருத்தமான கேரக்டர் பழனிசாமிதான்! அவமானங்களை தாங்கி கொள்வது ஆயக் கலைகளிலும் அடங்காத ஒன்றுதான் போல!

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## ஐ.நா. - தமிழ்நாடு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்...

முதல் பக்கத் தொடர்ச்சி

பாலின சமத்துவ முன்னோக்குடன் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைதல், பாலினப் பாகுபாடற்ற திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை வலுப்படுத்துதல், பொருளாதார வலுவூட்டலுக்கான வாய்ப்புகளை பெண்களுக்கு ஏற்படுத்துதல் போன்றவை இந்த ஒப்பந்தத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் ஆகும். இவற்றை செயல்படுத்திட ஐ.நா. பெண்கள் அமைப்பு தமிழ்நாடு அரசிற்கு தொழில்நுட்ப ஆதரவு வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகள் இச்செயல்பாடுகளில் நேரடியாக ஈடுபடும்.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது தமிழ்நாடு அரசின் தற்போதைய முயற்சிகளை வலுப்படுத்துவதோடு, மாநிலத்தில் பாலின சமத்துவம் மற்றும் நீடித்த வளர்ச்சியை நோக்கிய முன்னேற்றத்தை மேலும் ஒருங்கிணைக்க, ஒரு கட்டமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆதரவை வழங்கும்.

**ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) புத்தாக்க அலுவலகம், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு (OECD) பொதுத்துறை கண்டுபிடிப்புகளின் கண்காணிப்பகம் (OPSI) மற்றும் தமிழ்நாடு அரசின் மாநில திட்ட குழுவுக்கும் இடையேயான முத்தரப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம்.**

ஸ்வீடனில் உள்ள ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (UNICEF) புத்தாக்க அலுவலகம், உலகளவில் தமிழ்நாட்டினை துணை தேசிய அளவிலான முதல் மாநிலமாக தேர்வுசெய்து, தமிழ்நாடு மாநில திட்டக் குழுவுடன் ஆறு மாத காலத்திற்கான முத்தரப்பு ஒப்பந்தத்தினை ஏற்படுத்த முன்மொழிந்துள்ளது. இம்முயற்சி, தமிழ்நாட்டின் தொலை நோக்கு பார்வைக்கு ஏற்றவாறு அனைவரையும் உள்ளடக்கிய சமூக வளர்ச்சிக்கும், பொது சேவை வழங்கலை மேம்படுத்தவும், சீரமைத்து ஒருங்கிணைக்கவும் உதவும்.

பாரீசில் உள்ள பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பின் (OECD) தொழில்நுட்ப உதவியுடன் இவ்வொப்பந்தம் செயல்படுத்தப்படும். பொதுத்துறை கண்டுபிடிப்புகளின் கண்காணிப்பகம் (OPSI) வளர்ந்த நாடுகளின் கொள்கை வகுத்தலில் பங்களிப்பு நல்கிவரும் அறிவுசார் குழு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு அரசுகளுக்கு இடையேயான அமைப்பு ஆகும்.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு (OECD) பொதுத்துறை கண்டுபிடிப்புகளின் கண்காணிப்பகம் (OPSI), ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF - Office of Innovation) ஆகிய அமைப்புகள் இந்த முத்தரப்பு ஒத்துழைப்பிற்கு முழு ஆதரவு தெரிவித்துள்ளன மற்றும் யூனிசெப் தமிழ்நாடு மற்றும் கேரளா அலுவலகம் மூலம் இது செயல்படுத்தப்படும்.

**ஒத்துழைப்பின் நோக்கங்கள்**

தமிழ்நாடு அரசு மற்றும் அரசு சார் நிறுவனங்களில், அனைத்தையும் உள்ளடக்கிய புத்தாக்க மேம்பாட்டிற்கான ஒரு சூழல் அமைப்பை உருவாக்குதல், புதுமையான சமூக பொது சேவைகளை வடிவமைத்தல், ஆய்வு செய்தல், மதிப்பீடு செய்தல், ஆகியவற்றில் அரசு துறை நிறுவனங்களின் திறன்களை மாநில திட்டக் குழு மூலம் வலுப்படுத்துதல், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (UNICEF) கள அனுபவம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பின் (OECD) கொள்கை நிபுணத்துவத்தை பயன்படுத்தி அரசு சார் நிறுவனங்களில் புதுமைகளை நடைமுறைப் படுத்தி, உலகளாவிய நல்ல நடைமுறைகளை ஒருங்கிணைத்தல் ஆகியவை இந்த ஒத்துழைப்பின் நோக்கங்கள் ஆகும்.

**உடன்படிக்கையின் முக்கிய சாராம்சங்கள்**

உலகளாவிய பார்வையினை அடிப்படையாக கொண்டு இம்முத்தரப்பு ஒத்துழைப்பு தமிழ்நாட்டிற்கான புதுமை கட்டமைப்புகளை உருவாக்கவும், மாநில அளவிலான புத்தாக்க கொள்கையை உருவாக்கவும், அரசின் பல்வேறு துறைகளில் புதுமை முயற்சிகளை வழிநடத்தவும், மதிப்பீடு செய்வதற்கும் மாநில புத்தாக்க குறியீடு உருவாக்கிடவும் உதவும்.

இம்முன்னெடுப்பு, புதுமை முயற்சிகளுக்கான வலுவான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (Monitoring & Evaluation) கட்டமைப்புகளை வடிவமைத்தல் மற்றும் அரசு அமைப்புகளுக்கு திறன் மேம்பாட்டிற்கான பயிற்சிகளை பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பால் (OECD) வழி நடத்தப்பட்டு பயிற்சியாளர்களின் பயிற்சி மற்றும் நீடித்த நிலையான திறன் மேம்பாட்டு திட்டங்களை மேற்கொள்ள வழி வகுக்கும்.

**உடன்படிக்கையின் முக்கியத்துவம்**

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு (OECD) துணை தேசிய அளவில் ஒரு மாநில அரசுடன் நேரடியாக ஒத்துழைப்பை ஏற்படுத்துவது மாநிலத்தின் சாதனையின் மைல்கல்லாக அமைகிறது.

பொதுத்துறை கண்டுபிடிப்புகளில் தமிழ்நாட்டை சர்வதேச அங்கீகாரத்துடன் முன்னணி மாநிலமாக நிலை நிறுத்துவதுடன், அரசாங்க அமைப்புகளுக்குள் உலகளவில் தரப்படுத்தப்பட்ட அளவிடக் கூடிய புத்தாக்க கட்டமைப்புகளை ஏற்றுக்கொள்ளவும் உதவுகிறது. குறிப்பாக குழந்தைகள் மற்றும் விளிம்பு நிலையிலுள்ள சமூகங்களுக்கான புதுமையான பொது சேவைகளை வடிவமைத்தல், செயல்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான திறன்களை மேம்படுத்திடவும் உதவும்.

**உலக நாடுகள் பங்கேற்பு**

சமூக மேம்பாட்டுக்காக தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வரும் மக்கள் நல புதுமையான திட்டங்களுக்கு உலக அளவில் கிடைத்த அங்கீகாரமாக, பல்வேறு உலக நாடுகளில் பிரதிநிதித்துவம் கொண்டுள்ள யூனிசெப் அமைப்பானது, இந்த கூட்டாண்மையுடன் இணைந்து, 30க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கவுள்ள “COMPASS Cohort”, நிகழ்ச்சி ஜனவரி 26, 2026ல் நடத்த திட்டமிட்டுள்ளது. இந்த நிகழ்வில் பங்கேற்க துணை தேசிய அளவில், தமிழ்நாடு மாநிலம் அழைக்கப்பட்டது இதுவே முதல் நிகழ்வாகும். இது சர்வதேச தளத்தில் தமிழ்நாட்டின் அரசு துறைகளின் நிர்வாகப் புதுமைகளை வெளிப்படுத்த ஒரு நல்வாய்ப்பை வழங்குகிறது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசின், அரசு துறை புதுமைகளைப் பற்றி எடுத்துரைக்க மாநில திட்ட குழுவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதல் மாநிலமாக உலகளவிலான இந்த கூட்டத்தில் கலந்து கொள்வது வரலாற்று சிறப்புமிக்க முக்கிய நிகழ்வாகும்.

**தமிழ்நாடு மாநிலக் குறிக்காட்டி வரையறை 2.0 (Tamil Nadu State Indicator Framework2.0)**

தமிழ்நாடு அரசின் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, மாநில திட்டக் குழு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒருங்கிணைப்பு மையம் ஆகியவற்றுடன் இணைந்து, தேசிய புள்ளியியல் அலுவலகத்தால் புதியதாக உருவாக்கப்பட்ட குறிக்காட்டி களின் தன்மையைக்கருத்தில்கொண்டும், நீடித்த வளர்ச்சி இலக்குகளைக் கண்காணிப்பதில் உலகளாவிய மற்றும் தேசிய அளவில் மாறி வரும் சூழ்நிலையைத் தொடர்ந்து கண்காணிக்க ஏதுவாக, தற்போது நடைமுறையில் உள்ள 2020ஆம் ஆண்டில் வடிவமைக்கப்பட்ட மாநிலக் குறிக்காட்டி வரையறை1.0ஐ (SIF1.0) மறுவரையறை செய்துள்ளது.

தமிழ்நாடு மாநிலக் குறிக்காட்டி வரையறை2.0 என்ற பெயரில் இறுதி செய்யப்பட்டுள்ள இந்த வரையறையில் 17 நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான 244 குறிக்காட்டிகள் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மாநிலக் குறிக்காட்டி வரையறை 2.0யை வெளியிட்டார்.

**மாநில திட்டக்குழுவின் நான்கு ஆய்வறிக்கைகள் சமர்ப்பித்தல்**

மாநில திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்ட (1) சுற்றுச் சூழல் அமைப்புச் சேவைகளின் பொருளாதார மதிப்பீடு தமிழ்நாட்டின் முன்னுரிமை அளிக்கப்பட்ட 61 ஈரநிலங்கள்/நீர்நிலைகள் பற்றிய ஆய்வு

(2) தமிழ்நாட்டின் புறநகர் பகுதிகளின் அமைப்பு மற்றும் நிலையான புறநகர் மேலாண்மை கட்டமைப்பை மேம்படுத்துதல் (3) முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் பசுந்தாள் உரமிடுதல் மீதான மதிப்பீட்டாய்வு (4) தமிழ்நாட்டின் வளர் இளம் பெண்களிடையே நீடிக்கும் இரத்த சோகை: செயல்பாட்டு இடைவெளிகளும் பாதிப்புகளும் ஆகிய நான்கு அறிக்கைகளை மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயலாளர் சஜ்ஜன்சிங் ரா.சவான், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் திருமதி ஆர். ஜெயா, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், மாநில திட்டக்குழுவின் உறுப்பினர் செயலர் திருமதி சு. சுதா, ஐ.நா. பெண்கள் குழுவினர், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் குழுவினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## குட்கா....!

போதைக்கு மடை திறந்து

அன்றைய

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரே காவல்துறை

அனுசரணையோடு குட்கா வியாபாரத்துக்கு துணை போனதும்..

அதற்காக அவர்கள்

சி.பி.ஐ.

வழக்கில்

சிக்கியிருப்பதும் என

போதை கலாச்சாரத்துக்கு புதுப்பாதை போட்டது

எடப்பாடியின் குத்தகை

ஆட்சி தான்..

என்னநாஞ் சொல்றது



**மருது அழகுராஜ்**

கழக செய்தித் தொடர்புக் குழு

துணைத் தலைவர்